Puducherry

Regional Bulletin

Tamil /18.10hrs / 14.07.2026 /

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்

தேதி : 14.07.2026 – செவ்வாய்க்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கார்கில் வெற்றி தினத்தை முன்னிட்டு "சௌர்ய விஜய் யாத்திரை"யை இன்று தொடக்கி வைத்தார்.

இந்தியாவின் மிகப்பெரிய ஜவுளி கண்காட்சியான பாரத் டெக்ஸ் 2026-ஐ மத்திய ஜவுளி அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் புதுடெல்லியில் இன்று தொடக்கி வைத்தார்.

நிலம் கையகப்படுத்தும் முழு செயல்முறையையும் நிர்வகிப்பதற்காக ரயில் பூமி என்ற இணையதளம் தொடக்கப்படும் என்று மத்திய ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி மகாத்மா காந்தி அரசு முதுகலை பல் மருத்துவக் கல்லூரியில், இந்த ஆண்டு மேலும் 2 புதிய முதுகலை பல் மருத்துவப் படிப்புகள் தொடக்கப்படும் என்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

*ராஜ்நாத் சிங் -1 (18)*

மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் 13 நாட்கள் நடைபெறும் "சௌர்ய விஜய் யாத்திரை" என்ற நினைவு மோட்டார் சைக்கிள் பயணத்தை இன்று புதுடெல்லியல் உள்ள தேசிய போர் நினைவிடத்தில் கொடியசைத்து தொடக்கி வைத்தார். அப்போது உரையாற்றிய அவர் இந்தப் பயணம், மக்களிடையே குறிப்பாக இளைஞர்களிடையே தேசபக்தி உணர்வைத் தூண்டும் என்று நம்பிக்கை தெரிவித்தார். தேசத்தின் சுதந்திரம் மற்றும் கௌரவத்தை பாதுகாப்பது என்பது எல்லைகளில் மட்டுமன்றி மக்களின் நினைவுகளிலும், நம்பிக்கைகளிலும் நிலைத்திருக்கிறது என்றார். நாட்டின் நிலம், அடையாளம் மற்றும் கௌரவத்தின் மீது விழும் எத்தகைய விரோத பார்வைக்கும், முழு பலத்துடன் பதிலடி கொடுப்பதற்கான நமது நீடித்த உறுதியை 1999-ஆம் ஆண்டின் கார்கில் வெற்றி பிரதிபலிக்கிறது என்றும் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் பாதுகாப்பு படை தலைமைத் தளபதி ஜெனரல் என்.எஸ். ராஜா சுப்ரமணி, ராணுவ தலைமைத் தளபதி ஜெனரல் தீரஜ் சேத் மற்றும் பிற மூத்த அதிகாரிகளும் கலந்து கொண்டனர். கார்கில் வெற்றி தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த யாத்திரை இம்மாதம் 26ஆம் தேதி லடாக்கில் ட்ராஸ் பகுதியில் உள்ள கார்கில் போர் நினைவிடத்தை சென்றடைய உள்ளது.

*ராஜ்நாத் சிங் -2 (07)*

ஒரே பயணம், ஒரே தேசம், ஒரே வணக்கம் என்ற குறிக்கோளின் அடிப்படையில் இந்த மோட்டார் சைக்கிள் பயணம் மேற்கொள்ளப்படுகிறது. இதில் பங்கேற்கும் வீரர்கள் 1900 கிலோ மீட்டர் பயணம் செய்வார்கள். செல்லும் வழியில் "சண்டி மந்திர் போர் நினைவிடம்", "ரெசான்ங் லா போர் நினைவிடம்" மற்றும் "லே போர் நினைவிடம்" உள்ளிட்ட முக்கிய ராணுவ நினைவிடங்களில் அஞ்சலி செலுத்தவுள்ளனர்.

*பாரத் டெக்ஸ் – 1 (07)*

இந்தியாவின் மிகப்பெரிய ஜவுளி கண்காட்சியான பாரத் டெக்ஸ் 2026-ஐ மத்திய ஜவுளி அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் இன்று தொடக்கி வைத்தார். புதுடெல்லி, பாரத் மண்டபத்தில் நடைபெறும் இக்கண்காட்சி குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், பாரத் டெக்ஸ் என்பது பிரதமரின் தொலைநோக்குப் பார்வை என்றும், இது தற்போது ஒரு சர்வதேச நிகழ்வாக மாறியுள்ளது என்றும் தெரிவித்தார். இது குறித்த ஒரு செய்தி தொகுப்பு... (வாய்ஸ்)

*பாரத் டெக்ஸ் -2 வாய்ஸ் (16)*

(வாய்ஸ்)

மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் மேலும் கூறுகையில், ஒவ்வொரு ஆண்டும் இந்த கண்காட்சியில் பங்கேற்பவர்கள், மற்றும் பார்வையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்று தெரிவித்தார். இக்கண்காட்சியில், இந்த ஆண்டு 130 நாடுகளில் இருந்து, 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாங்குபவர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் பங்கேற்பதாகவும் தெரிவித்தார். குறு-சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களும் இந்த கண்காட்சியில் கலந்து கொள்வதாக தெரிவித்த அமைச்சர், பல்வேறு நாடுகளுடன் மேற்கொள்ளப்பட்ட தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களும் ஜவுளித்துறைக்கு மிகுந்த பயன் அளிக்கின்றன என்றும் கூறினார். பாரத் டெக்ஸ் 2026 தொடக்க விழாவில் ஜவுளித்துறை இணையமைச்சர் திரு. பபித்ரா மார்கெரிட்டா மற்றும் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த ஜவுளித்துறை அமைச்சர்களும் கலந்து கொண்டனர். ஜவுளித்துறை தொடர்பான தொழில்நுட்பம், புத்தாக்கம், முதலீடு மற்றும் சர்வதேச வர்த்தகம் ஆகிய துறைகளில் இந்தியாவின் வளர்ந்து வரும் உலகளாவிய தலைமைத்துவத்தை வெளிப்படுத்தும் வகையில் இந்த கண்காட்சி அமைந்துள்ளது.

*பாரத் டெக்ஸ் – 2 வாய்ஸ் (03)*

உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், முதலீட்டாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், கைவினைஞர்கள், புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் நுட்ப வல்லுநர்களை ஒன்றிணைப்பதாக இக்கண்காட்சி அமைந்துள்ளது.

*அஸ்வினி வைஷ்ணவ் (19)*

நிலம் கையகப்படுத்தும் முழு செயல்முறையையும் நிர்வகிப்பதற்காக ரயில் பூமி என்ற இணையதளம் தொடக்கப்படும் என்று மத்திய ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். இன்று புதுடெல்லியில் இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்திய ரயில்வேயில் கட்டுமானம் உள்ளிட்ட பல துறைகளில் நவீன சீர்திருத்தங்களை தமது அமைச்சகம் கொண்டு வந்துள்ளதாக தெரிவித்தார். மின் உற்பத்தி நிலையங்களில் உருவாகும் சாம்பல் தூள் இனி சுற்றுச்சூழலை மாசுபடுத்தாத வகையில் கண்டெய்னரில் எடுத்துச் செல்லும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் கூறினார். குறிப்பிட்ட தொழில்துறை தேவைகளுக்கேற்ப சிறப்பு சரக்குப் பெட்டிகளை அவர்களே வடிவமைக்கும் வகையில் அனுமதி வழங்கப்படும் என்றும் கூறினார். சரக்குகளை அனுப்பும் தனியார் நிறுவனத்தினர் வடிவமைக்கும் சரக்குப் பெட்டிகளை ஆராய்ச்சி வடிவமைப்பு மற்றும் தர நிர்ணய அமைப்பான RDSO மதிப்பீடு செய்து அனுமதி அளித்த பிறகே பயன்படுத்த முடியும் என்றும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார். ரயில்வே திட்டப் பணிகளில் ஈடுபடும் பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். திட்டங்களை விரைந்து முடிக்க அதில் ஈடுபடும் அனைத்து தொழிலாளர்களும் நன்கு பயிற்சி பெற்றிருப்பது முக்கியம் என்றும் அவர் கூறினார்.

*அஸ்வினி வைஷ்ணவ் – 2(02)*

ரயில்வேயில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடர்ந்து ஊக்கமளித்து வருகிறார் என்றும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

*பல் மருத்துவ படிப்பு (09)*

புதுச்சேரி கோரிமேட்டில் உள்ள மகாத்மா காந்தி அரசு முதுகலை பல் மருத்துவக் கல்லூரியில், மேலும் 2 புதிய முதுகலை பல் மருத்துவப் படிப்புகள் இந்த ஆண்டு முதல் தொடக்கப்படும் என்று அக்கல்லூரியின் நிறுவன தலைவரும், புதுச்சேரி முதலமைச்சருமான திரு. ரங்கசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். இதற்கு மத்திய சுகாதாரத்துறை மற்றும் தேசிய பல் மருத்துவக் கமிஷன் அங்கீகாரம் அளித்துள்ளன என்றும், இதன் மூலம் இக்கல்லூரியின் அனைத்து பல் மருத்துவத் துறைகளிலும், முதுகலை பல் மருத்துவப்படிப்புகள் உள்ளன என்றும் அந்த அறிக்கையில் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

*பிரான்ஸ் தேசிய தினம் (03)*

பிரான்ஸ் நாட்டின் தேசிய தின விழாவை ஒட்டி புதுச்சேரி கடற்கரைச் சாலையில் உள்ள போர் வீரர் நினைவு சின்னத்தில் பிரான்ஸ் மற்றும் புதுச்சேரி அரசு சார்பில் மரியாதை செலுத்தப்பட்டது. இது குறித்த கூடுதல் தகவல்கள் … (வாய்ஸ்)

*பிரான்ஸ் தேசிய தினம் -2 வாய்ஸ் (15)*

(வாய்ஸ்)

கடந்த 1789ஆம் ஆண்டு ஜூலை 14ஆம் தேதி அதுவரை நடைபெற்ற மன்னராட்சியை முடிவுக்கு கொண்டுவரும் வகையில், பிரான்ஸ் தலைநகர் பாரீசில் பஸ்தி என்ற சிறைச்சாலை மக்கள் புரட்சி மூலம் தகர்க்கப்பட்டு மக்களாட்சி நிறுவப்பட்டது. இந்த தினம் பிரான்ஸ் நாட்டு தேசிய தினமாக ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்பட்டு வருகிறது. மேலும் அக்காலத்தில் மின்சாரம் இல்லாததால் மக்கள் தீப்பந்தம் ஏந்தி புரட்சி செய்து வெற்றி பெற்றனர். இந்நிலையில் இத்தினத்தை நினைவுகூரும் வகையில் புதுச்சேரி கடற்கரைச் சாலையில்

உள்ள போர் வீரர் நினைவுச் சின்னத்தில் இன்று காலை நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன், சென்னையில் உள்ள பிரான்ஸ் துணை தூதர் திரு. ஜீன் பிலிப் ஹூதர் ஆகியோர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர். இந்நிகழ்ச்சியின் போது இந்தியா-பிரான்ஸ் தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டு, இரு நாட்டு தேசிய கீதங்களும் இசைக்கப்பட்டன. பிரஞ்சு குடியுரிமை பெற்ற மக்கள், முன்னாள் ராணுவ வீரர்கள் ஆகியோரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*காரைக்கால் முகாம் (09)*

புதுச்சேரி துணைநிலை ஆளுநரின் அறிவுறுத்தலின்படி காரைக்கால் மாவட்டத்தில், மாதந்தோறும் நடத்தப்படும் பொதுமக்கள் குறைதீர்ப்பு முகாம் நாளை நடைபெறும் என்று அம்மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது. காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட ஆட்சியர் திருமதி இஷிதா ராட்டி தலைமையில் இம்முகாம் நடைபெறவுள்ளது. பொதுமக்கள் தங்களின் கோரிக்கைகள் மற்றும் குறைகளை நாளை காலை 9.30 மணி முதல் நண்பகல் 12 மணிவரை நேரில் வந்து தெரிவிக்கலாம் என்று மாவட்ட ஆட்சியரின் செயலர் திரு.வித்யாதரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

*மருத்துவ முகாம் – காரைக்கால் (09)*

காரைக்கால் அரசு பொது மருத்துவமனையில் வரும் வெள்ளிக்கிழமையன்று சிறப்பு மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது. இம்முகாமில் புதுச்சேரி இந்திராகாந்தி அரசு பொது மருத்துவமனையைச் சேர்ந்த சிறப்பு மருத்துவர்கள் கலந்து கொண்டு சிகிச்சை அளிக்க உள்ளனர். குழந்தைகள் அறுவை சிகிச்சை துறையின் தலைவர் டாக்டர் ஸ்ரீராம், இதய நோய் நிபுணர் டாக்டர் பாலமுருகன், நரம்பியல் துறையைச் சேர்ந்த டாக்டர் துரைராஜ், சிறுநீரகவியல் துறையைச் சேர்ந்த டாக்டர் பாலசுப்ரமணியம் முத்தையா ஆகியோரும் இச்சிறப்பு முகாமிற்கு வருகை தரவுள்ளனர்.

*இந்தியா கண்டனம் - 1(14)*

ஹார்மூஸ் ஜலசந்தியில் இந்திய மாலுமிகள் பயணம் செய்த கப்பல் மீதான தாக்குதல் குறித்து இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது. ஹார்மூஸ் ஜலசந்தி வழியாக இன்று பயணித்த M.T.AL Bahiyah மற்றும் M.T.Mombasa ஆகிய 2 கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இவ்விரு கப்பல்களிலும் 30 இந்திய மாலுமிகள் பயணம் செய்தனர். இது தொடர்பாக, புதுடெல்லியில் உள்ள ஈரான் தூதரகத்தின் துணை தூதர் இன்று காலை வெளியுறவு அமைச்சகத்திற்கு வரவழைக்கப்பட்டு, அவரிடம் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இது குறித்து வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் M.T.AL Bahiyah கப்பலில் இருந்த 12 இந்தியர்களில் ஒருவர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள இந்திய தூதரகம் நிலைமையை உன்னிப்பாக கவனித்து வருவதுடன் பாதிக்கப்பட்ட இந்திய மாலுமிகளுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்யும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*சுகாதார அமைச்சகம் (14)*

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை அடையும் வகையில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளது. செயற்கை நுண்ணறிவு, ரோபாட்டிக்ஸ், டிஜிட்டல் சுகாதாரம், உயிரி தொழில்நுட்பம் உட்பட நவீன தொழில்நுட்பங்களின் உதவியுடன் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை அடைவதில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் அந்தப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தாய் சேய் நல மருத்துவம், மன நல மருத்துவம், காசநோய், புற்றுநோய் போன்றவற்றுக்கான சிகிச்சையில் இந்த நவீன தொழில்நுட்பங்கள் மிகுந்த பயனளிப்பதாக உள்ளது என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேலும், புதிய ஆராய்ச்சிகள் மற்றும் உள்நாட்டு தொழில்நுட்பங்கள் மூலம் சுகாதாரத்துறையை மேலும் வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை

எடுக்கப்பட்டு வருவதாகவும் மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*வானிலை (04)*

மேற்கு திசைக் காற்றின் வேகமாறுபாடு காரணமாக இன்றும் நாளையும் தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் பொதுவாக வறண்ட வானிலையே நிலவக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*விளையாட்டு (07)*

FIFA உலகக் கோப்பை முதல் அரையிறுதிப் போட்டியில் பிரான்ஸ் அணியும், ஸ்பெயின் அணியும் இன்று மோதவுள்ளன. இப்போட்டி அமெரிக்காவின் டல்லாஸ் மைதானத்தில் இன்று நள்ளிரவு இந்திய நேரப்படி 12.30 மணிக்குத் தொடங்குகிறது.

அட்லாண்டா-வில் நாளை நள்ளிரவு 12.30 மணிக்கு தொடங்கவுள்ள இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் அர்ஜென்டினா, இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

*பாலஸ்தீனம் (10)*

பாலஸ்தீன மக்களுக்கு நன்மையளிக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று வெளியுறவு அமைச்சக செயலர் திருமதி ஸ்ரீபிரியா ரங்கநாதன் தெரிவித்துள்ளார். பெல்ஜியம் தலைநகர் பிரஸ்ஸெல்ஸில் இது தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய அவர், பாலஸ்தீனத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு இந்தியா தொடர்ந்து உதவி செய்து வருகிறது என்று தெரிவித்தார். அந்நாட்டின் சுகாதாரம், கல்வி, தொழிற்பயிற்சி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்திய நிதியுதவியுடன் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கார்கில் வெற்றி தினத்தை முன்னிட்டு “சௌர்ய விஜய் யாத்திரை”யை இன்று தொடக்கி வைத்தார்.

இந்தியாவின் மிகப்பெரிய ஜவுளி கண்காட்சியான பாரத் டெக்ஸ் 2026-ஐ மத்திய ஜவுளி அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் புதுடெல்லியில் இன்று தொடக்கி வைத்தார்.

நிலம் கையகப்படுத்தும் முழு செயல்முறையையும் நிர்வகிப்பதற்காக ரயில் பூமி என்ற இணையதளம் தொடக்கப்படும் என்று ரயில்வே அமைச்சர் திரு.அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மகாத்மா காந்தி அரசு முதுகலை பல் மருத்துவக் கல்லூரியில், இந்த ஆண்டு மேலும் 2 புதிய முதுகலை பல் மருத்துவப் படிப்புகள் தொடங்கப்படும் என்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது BI/KR/VM.